# இலங்கைப் பாராளுமன்றம்
# வெற்றிடங்கள் - 2025

---

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியிலுள்ள பின்வரும் பதவிகளுக்கு சிறந்த தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரித்த விண்ணப்பங்கள் கல்வி / தொழில் தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்கள் என்பவற்றின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் **"பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே"** எனும் முகவரிக்கு 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். (இந்த அறிவித்தல் விபரங்களை www.parliament.lk என்ற இணையத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

**கவனிக்க வேண்டியது: விண்ணப்பம் அனுப்பப்படும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி கட்டாயம் குறிப்பிடப்படுதல் வேண்டும்.**

## 1 மேற்பார்வையாளர்/ செலவுப்பட்டியல் எழுதுநர் - [வெற்றிடம் 01]

### 1.1 தொழிலின் தன்மை

நுவரெலியாவில் அமைந்துள்ள சேனாதிபதி இல்லத்தில் செலவுப்பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் வீடு பராமரிப்பு, தோட்ட அலங்காரம் மற்றும் உணவுபானங்கள் வழங்கல் ஆகிய கருமங்களுடன் தொடர்புடைய அலுவலகப் பணிகளை மேற்பார்வை செய்தல்.

### 1.2 மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

**2016.11.07** ஆம் திகதிய **06/2016** ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை **I** இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. **32,330-3x380/10x445/4x660-40,560** ஆகும்
(சகல கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தப் பதவிற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப சராசரி மாதாந்த சம்பளம் ரூ. **83,000/-** ஆகும்).

### 1.3 வயதெல்லை

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

## 1.4 கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம்

(அ) **கல்வித் தகைமைகள்**

i) கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் வணிக துறையில் (பழைய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்/ கல்விப் பொதுத் தராதரப் உயர்தர பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

அத்துடன்

ii) கல்விப் பொது (சாதாரண தராதரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

(ஆ) **தொழில் தகைமைகள்**

i) இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தால் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஹோட்டல் பாடசாலையினால் நடத்தப்படும் 05 மாதங்களுக்கு குறையாத வீடு பராமரிப்பு அடிப்படை மட்ட பாடநெறி ஒன்றை அல்லது உணவுபான சேவை தொடர்பான அடிப்படை மட்ட பாடநெறி ஒன்றை (Basic Level Course in House Keeping or Basic Level Course in Restaurant and Bar Service) பின்பற்றி சான்றிதழை பெற்றிருத்தல்

அத்துடன்

ii) வாழ்க்கைத்தொழில் பயிற்சி (VTA) அதிகார சபையில்/தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் (NAITA) அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது ஒரு நிறுவனத்தில் ஆறு மாதங்களுக்கு குறையாத கணணிப் பிரயோகம் பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல்.

அத்துடன்

(இ) **அனுபவம்**

சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்ற ஒரு ஓய்வு இல்லம் ஒன்றில் அல்லது ஹோட்டலில் மேற்பார்வை மட்டப் (Supervisory Level) பதவி ஒன்றில் 02 வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***குறிப்பு:*** அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் செலவுப்பட்டியல் எழுதுநர் பதவியில் அல்லது அதற்கு சமனான ஒரு பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாக கருதப்படும்.

## 1.5 ஆட்சேர்ப்பு முறை

எழுத்து மூல பரீட்சை மற்றும் நேர்முக பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர்.

(அ) **எழுத்துமூல பரீட்சை**

இப்பரீட்சையில் பொது அறிவு, நுண்ணறிவு, செலவு பட்டியல் மற்றும் வருமானம்/செலவுக் கணக்குகளை தயாரித்தல் மேற்பார்வை நடவடிக்கைகள் தொடர்பான அறிவு சோதிக்கப்படும். இதற்காக வழங்கப்படும் அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) நேர்முகப்பரீட்சை-:

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் கீழ்காணும் விடயப் பிரிவுகளின் அடிப்படையில் நேர்முக பரீட்சை நடாத்தப்படும். இதற்காக வழங்கப்படும் அதிகபட்ச புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| இல | விடயப் பிரிவு |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழிற் தகைமை |
| 2 | விடய அறிவு |
| 3 | சேவை அனுபவம் |
| 4 | ஆளுமை, நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமைகள் |

** மேற்பார்வையாளர்/ செலவுப்பட்டியல் எழுதுநர் பதவி பங்களா பணியாளர் வகையின் கீழ் வரும் ஒரு பதவியென்பதால், தேவையான சந்தர்ப்பங்களில் 24 மணி நேரமும் சேவையாற்ற தயாராக இருக்க வேண்டும். மேலதிக நேர கொடுப்பனவுகள் பெறுவதற்கோ, அரசாங்க பொது விடுமுறை நாட்களில் பணிபுரிவதற்காக மேலதிக கொடுப்பனவுகள் அல்லது படிகள் வழங்கப்படமாட்டாது.

## 2 துணிகள் அறை பணியாள் பதவி - [வெற்றிடம் 01]

### 2.1 தொழிலின் தன்மை

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியினரின் உத்தியோகபூர்வ உடைகள், திறைத் துணிகள் என்பன அடங்கலாக துணிமணிகளை சுத்தமாகப் பேணி உறுதிப்படுத்துவது தொடர்பாக உணவுபான வீடு பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து அலுவலகப் பணிகளை நிறைவேற்றுவதை இந்தப் பதவியின் ஊடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.2 மாதாந்த சம்பள அளவுத்திட்டம்

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 25,520-9x270/10x300/6x330-32,930/-.

(அனைத்து கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தப் பதவிற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 70,000/-) ஆகும்.

### 2.3 வயதெல்லை

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

## 2.4 கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம்

(அ) சிங்கள அல்லது தமிழ் மொழியில் திறமைச்சித்தியுடன், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகள் அடங்கலாக க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

இலங்கை ஆடைகள் மற்றும் புடவைகள் நிறுவகத்திலிருந்து (Sri Lanka Institute of Textile and Apparel) அல்லது பிற அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவகத்திலிருந்து பின்னல் தொழில்நுட்பம் பற்றிய ஒரு சான்றிதழை (Certificate in Knitting Technology) பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் இலங்கை சுற்றுலா சபை அங்கீகரித்துள்ள ஒரு நட்சத்திர வகுப்பு ஹோட்டலில் துணிகள் அறை பணியாள் பதவியில் அல்லது துணிகள் சலவைசெய்யும் தொழிலில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) சிங்கள அல்லது தமிழ் மொழியில் திறமைச்சித்தியுடன், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் சாதாரண சித்திகள் அடங்கலாக க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் இலங்கை சுற்றுலா சபை அங்கீகரித்துள்ள ஒரு நட்சத்திர வகுப்பு ஹோட்டலில் துணிகள் அறை பணியாள் பதவியில் அல்லது துணிகள் சலவைசெய்யும் தொழிலில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

****மேற்குறித்த தகைமைகளுக்கு மேலதிகமாக தையல் பின்னல் தொடர்பான செயன்முறை அறிவு கட்டாயமாகும்.**

## 2.5 ஆட்சேர்ப்பு முறை

எழுத்து/செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேத்துக்கொள்ளப்படும்.

### (அ) எழுத்து / செயன்முறைப் பரீட்சை

மேற்குறித்த பதவிற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு இடையில் தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் இந்த எழுத்துமூல/செயன்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும். இந்தப் பரீட்சையின் போது ஆடைகளை ஒழுங்காக அடுக்கிவைத்தல், துணிகளை துவைத்தல், ஆடைகளை மினுக்குதல் முதலிய விடயங்கள் தொடர்பாக விண்ணப்பதாரர்களுக்கு இருக்கின்ற திறன்கள் பரிசீலிக்கப்படும். இதன் நிமித்தம் 1 மணித்தியால எழுத்து/செயன்முறை பரீட்சையை நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100).

**(ஆ) நேர்முகப் பரீட்சை**

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சையின் மூலம் பின்வரும் தகவுதிறன்களை அடிப்படையாகக்கொண்டு கட்டமைந்த ஒரு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அந்தப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100):

| **தொடர் இலக்கம்** | **விடயப் பிரிவு** |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

## 3 தோட்டப் பராமரிப்பு உதவியாளர் பதவி - [வெற்றிடங்கள் 02]

### 3.1 <u>தொழிலின் தன்மை</u>

பாராளுமன்ற வளாகம், மரங்கள், தாவரக்கன்றுகள், பச்சைவீடு என்பவற்றைப் பராமரிப்பது தொடர்பான அலுவலக கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் தோட்ட அலங்காரத்திற்கு அலங்காரத் தாவரங்களை தயார்படுத்துதல் மற்றும் இடுதல் தொடர்பாக உணவுபான, வீடு பராமரிப்பு சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து அலுவலகக் கடமைகளை நிறைவேற்றுவது இந்தப் பதவியின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

### 3.2 <u>மாதாந்த சம்பள அளவுத்திட்டம்</u>

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 25,520-9x270/10x300/6x330-32,930/-.

(அனைத்து கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்தப் பதவிற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 70,000/-) ஆகும்.

### 3.3 <u>வயதெல்லை</u>

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

### 3.4 <u>கல்வித் தகைமைகள், தொழில் தகைமைகள் மற்றும் அனுபவம்</u>

(அ) சிங்கள அல்லது தமிழ் மொழியில் மற்றும் கணிதம் உள்ளடங்களாக க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

தோட்டப் பராமரிப்புத் துறையில் அல்லது நாற்றுமேடைகள் முகாமைத்துவத் துறையில் NVQ மட்டம் II சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் தோட்ட அலங்கார/தோட்டப் பராமரிப்பு/நாற்றுமேடைகள் முகாமைத்துவத் துறை முதலிய துறைகளில் ஆறு மாதங்களுக்கு வருடத்திற்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) சிங்கள அல்லது தமிழ் மொழியில் மற்றும் கணிதம் உள்ளடங்களாக க.பொ.த. (சா.த.) பரீட்சையில் 06 பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

அத்துடன்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் அரசின் தாவரவியல் பூங்கா ஒன்றில் தோட்ட அலங்கார / தோட்டப் பராமரிப்பு / நாற்றுமேடைகள் முகாமைத்துவத் துறை முதலிய துறைகளில் ஐந்து வருடத்திற்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

## 3.5 ஆட்சேர்ப்பு முறை

எழுத்துமூல மற்றும் செயன்முறைப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

### (அ) எழுத்துமூல மற்றும் செயன்முறைப் பரீட்சை

மேற்குறித்த பதவிற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு இடையில் தகுதிபெறும் விண்ணப்பதாரர்கள் இந்த எழுத்துமூல மற்றும் செயன்முறைப் பரீட்சைகளுக்குத் தோற்ற வேண்டும். இந்தப் பரீட்சையின் போது தோட்ட அலங்கார/தோட்டப் பராமரிப்பு/நாற்றுமேடைகள் முகாமைத்துவம் முதலிய துறைகள் தொடர்பாக விண்ணப்பதாரர்களுக்கு இருக்கின்ற திறன்கள் பரிசீலிக்கப்படும். இதன் நிமித்தம் 1 மணித்தியால எழுத்துமூலப் பரீட்சையையும் நேர்முகப் பரீட்சையையும் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். ஒரு பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100).

### (ஆ) நேர்முகப் பரீட்சை

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சையின் மூலம் பின்வரும் தகவுதிறன்களை அடிப்படையாகக்கொண்டு ஒரு நேர்முகப் பரீட்சை நடத்தப்படும். அந்தப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100):

| தொடர் இலக்கம் | விடயப் பிரிவு |
|---|---|
| 1 | கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

## 4 சேவை நியதிகளும் நிபந்தனைகளும்

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கை தீர்மானங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்படும் என்பதற்கு அமைவாக இருக்கும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் அல்லது பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதார் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) நியமிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையும் நியமனம் செயல்வலுப்பெறும் திகதியும் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். ஏதாவது ஒரு வெற்றிடத்தை அல்லது வெற்றிடங்கள் அனைத்தையும் நிரப்பாமல் விடுவதற்கு செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக் குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இயைந்தொழுக வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள் / தபுதாரர்கள் ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

05. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (**மூலப்பிரதிகளல்ல**) இணைத்து அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் கேட்டுக்கொள்ளப்படும் போது மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(i) பிறப்பு சான்றிதழ்

(ii) கல்வித் தகைமை சான்றிதழ்கள்

(iii) தொழில் தகைமை சான்றிதழ்கள்

(iv) அனுபவ சான்றிதழ்கள்

06. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்தத் திணைக்கள/நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

07. பதவியை பெறும் நோக்கில் ஏதாவது ஒரு விதத்தில் செல்வாக்கு செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

08. விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள ஏதாவது தகவல் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது என கண்டறியப்பட்டால், அவர் தகைமையற்றவர் என குறிப்பிடப்படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

09. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பின்னர் அனுப்பப்படும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத அல்லது மாதிரிப் படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிற்குப் பின்னர் கிடைக்கும் திணைக்கள/நிறுவன தலைவரின் ஊடாக சமர்ப்பிக்கப்பட்டு கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

குஷானி ரோஹணதீர
பாராளுமன்ற செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2025 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் .... ஆம் திகதி

## இலங்கைப் பாராளுமன்றம்

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**வெற்றிடங்கள் - 2025**

---

**------------------------------------------------------------------ பதவி**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்): ....................................................................................................

   (ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்): ..........................................................................

   (இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்):- *(திரு/திருமதி/செல்வி)*: ..............................................

2. தேசிய அடையாள அட்டை இலக்கம்:

3. (அ) (i) தனிப்பட்ட முகவரி: ..........................................................................................................................

   ..........................................................................................................................................

   ..........................................................................................................................................

   (ii) மின்னஞ்சல் முகவரி: ..........................................................................

   (iii) தொலைபேசி இலக்கம்:

   (iv) WhatsApp தொலைபேசி இலக்கம்:

   (ஆ) (i) அலுவலக முகவரி: ...............................................................................................

   ..........................................................................................................................................

   ..........................................................................................................................................

   (ii) தொலைபேசி இலக்கம்:

   (இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியை தயவுசெய்து குறிப்பிடுக.

   தனிப்பட்ட ☐ அலுவலக ☐

4. (அ) பிறந்த திகதி: ஆண்டு ............... மாதம்............... திகதி ...............
   (பிறப்பு சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

   (ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது: வருடங்கள்: ... மாதங்கள்... நாள்:..

5. விவாகமானவரா/விவாகமாகாதவரா / : - (ஆம்/இல்லை): ...........................................................................

6. பால்நிலை: (ஆண்/பெண்): ...........................................................................

7. இலங்கைப் பிரஜையா என்ற விபரம்: (ஆம்/இல்லை)

8. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பரீட்சை | பாடம் | பெற்ற சித்தி | ஆண்டு |
|---|---|---|---|
| க.பொ.த. (உ/த) | | | |
| | | | |
| | | | |
| | | | |
| க.பொ.த. (சா/த) | சிங்களம் / தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. தொழில் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| பாடநெறி | நிறுவனம் | வலுப்பெறும் திகதி (Effective date) |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. ஏனைய தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

........................................................................................................................................

11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| நிறுவனம் | பதவி | சேவை காலம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரம்

(அ) நிறுவனத்தின் பெயரும் முகவரியும் : ..................................................................

(ஆ) முதல் நியமனத் திகதி : ..................................................................

(இ) தற்போது வகிக்கும் பதவி : ..................................................................

(ஈ) மாதாந்த அடிப்படை சம்பளம் : ..................................................................

(உ) கொடுப்பனவுகள் : ..................................................................

(ஊ) முழுமொத்த சம்பளம் : ..................................................................

13. ஒரு குற்றவியல் குற்றத்திற்கு நீங்கள் ஒரு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக கணிக்கப்பட்டுள்ளீரா? (ஆம்/ இல்லை)

ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக: ......................................................................................

......................................................................................................................................................

14. இதற்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா ?(ஆம்/இல்லை)

ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடுக.: ......................................................................................

......................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள எல்லா விபரங்களும் உண்மையானவையும் மற்றும் சரியானவையும் என இத்தால் உறுதியுரைக்கின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பொய்யானது அல்லது தவறானது என கண்டறியப்பட்டால் இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் எனவும் அல்லது நான் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் எந்தவித நஷ்டஈடுகளும் இன்றி பதவியிலிருந்து நீக்கப்படுவேன் எனவும் நன்கறிவேன்.

திகதி: .................................                ...........................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**<u>திணைக்கள / நிறுவன தலைவரின் சிபாரிசு</u>**

**அரசாங்க நிறுவனங்களில் /மாகாண அரச சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்**

பாராளுமன்ற செயலாளர் நாயகம்

இந்த நிறுவனத்தில் .................................................................................... என்ற பதவியை வகிக்கும் திரு/திருமதி/செல்வி .................................................................................................. என்பவரின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து அனுப்பி வைக்கின்றேன். இவர் இந்தப் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்/நிரந்தரமாக்கப்படவில்லை மற்றும் இவரின் வேலையும் நடத்தையும் திருப்திகரமானது மற்றும் இவர் ஒழுககாற்று நடவடிக்கைக்கு ஆளாக்கப்படவில்லை அல்லது அத்தகைய ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் எடுக்கும் அபிப்பிராயம் இல்லை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இவர் இந்தப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் / விடுவிக்கப்படமாட்டார் (தயவுசெய்து பொருத்தமான சொற்களை கீறிவிடுக).

திகதி: ..............................                .....................................................

(உத்தியோகபூர்வ முத்திரை)

திணைக்கள/நிறுவன தலைவரின் கையொப்பம்